# இலங்கை புனித திருமுழுக்கு வாழிபாட்டு முறை

திருமுழுக்கு வழிபாடு வார்த்தைத் திருப்பணியில் அருளுரை இடம்பெற்றதன் பின்னர் திருமுழுக்குத் தொட்டியருகில் இடம்பெறும். வழமையாக ஆரம்பத்தில் இடம்பெறும் பாவ அறிக்கை, பற்றுறுதி அறிக்கை என்பன திருமுழுக்கு வழிபாட்டில் இடம்பெறுவதற்காகப் பின்போடப்படும். வயதுக்கு வந்த நபர் ஒருவர் திருமுழுக்குப் பெற்றால் தனது சாட்சியை அருளுரைக்குப் பின்பு பகிர்ந்துகொள்ளலாம்.

**வேண்டுகோளும் பிரகடனப் பிரார்த்தனையும்**

1. **பெற்றோர், அனுசரணையாளர், திருமுழுக்குப் பெறும் வயதுக்கு வந்த நபர்கள் : சட்டவரைபின்படி பற்றுறுதியில் போதனை பெற்றிருக்கும் நாம் இந்த நபர்கள் திருமுழுக்கையும் அர்ப்பணத்தையும், பெறவேண்டுமென்று இவர்களை சபையார் முன்பு நிறுத்தி, சபையார் இவர்கள் பற்றுறுதியில் வளர துணை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.**

**கண்காணிப்பாளர்:**
திருமுழுக்கிலே கடவுள் கிறிஸ்துவில் ஆரம்பப் படியினை எடுத்து வைக்கின்றார் என்றும் அதற்கான கிறிஸ்தவ சமூகத்தாரின் பதிலிறுப்பை திருமுழுக்கு பிரதிபலிக்கின்றதென்றும் கிறிஸ்தவ வளர்ப்பிற்கான பொறுப்பு மிகுந்த மனப்பாங்கை திருமுழுக்கு வெளிப்படுத்துகின்றது என்பதையும் நீர் இனம் காண்கின்றீரா?

**பெற்றோரும் ஏனையோரும்: எந்த நிபந்தனையுமில்லாமல் கடவுளின் கொடையாக, இவர்கள் கிறிஸ்தவ சமூகத்திற்குள் வளர இவர்களுக்கு கடவுளின் பேரருளும், அன்பும்,**

**அழைப்பும் தரப்படுகிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.**

**இவர்கள் புரிந்துகொள்ளும் வயதை அடையும்போது தீமையிலிருந்து மனந்திரும்பவும், பற்றுறுதியை அறிக்கை செய்யவும் ஆயத்தப்படுத்தி இவர்களை பேராயர் முன்பு கொண்டு வருவோம்.**

**கண்காணிப்பாளர்** : ''போங்கள். அனைத்து நாட்டவரையும் எனக்கு சீடராக்குங்கள். தந்தை, மைந்தன், தூய ஆவியானவரின் பெயராலே அவர்களுக்கு திருமுழுக்குத் தாருங்கள். நான் அவர்களுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் கைக்கொள்ளும்படி அவர்களுக்குப் போதியுங்கள்'' என்றார் நமதாண்டவர் இயேசு கிறிஸ்து. ''பிள்ளைகள் என்னிடமாய் வரட்டும். அவர்களைப் போன்றவர்களுக்கே கடவுளின் ஆட்சி உரியது'' என்று நமதாண்டவர் மொழிந்தார்

பெந்தகொஸ்தே நாளின் போது :''நீங்கள் ஒவ்வொருவரும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி மனம்திரும்பி இயேசு கிறிஸ்துவின் திருப்பெயராலே திருமுழுக்கினைப் பெற்றுக் கொள்ளுங்கள். கடவுளின் வாக்குறுதி அவர் அழைக்கும் அனைவருக்கும், உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உரியது'' என்று பேதுரு கூறினார்.

எனவே மறுபிறப்பு அடையப்போகும் இவர்களுக்காகவும், அவர்களை கிறிஸ்தவ திருச்சபைக்குள்ளான வாழ்விற்குள் வளர்க்கப்போகும் நமக்காகவும் நாம் கடவுளிடம் வேண்டல் செய்வோம்.

2. **கண்காணிப்பாளர்**: முடிவான சத்தியமாம் எங்கள் கடவுளே் உமது திருக்குமாரனை மனக்குலத்திற்கான உமது அருளின் உடன்படிக்கையாம் பாவமன்னிப்பை வழங்குவதற்காய் இந்த உலகிற்குள் அனுப்பி அதற்கு அடையாளமாகவும் முத்திரையாகவும் தண்ணீராலும் ஆவியாலும் பெறும் திருமுழுக்கு என்ற திருவருள் சாதனத்தை நீர் எமக்காய் ஏற்படுத்தினீர்.

அத்திருமுழுக்கின்போது நாம் பாவத்திற்கு இறந்து அடக்கம் பண்ணப்படுகின்றோம் நமது விடுதலையாளராம் கிறிஸ்துவால் உயிர்ப்பிக்கப்பட்டு தண்ணீரிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு, புதிய பிறப்பையும், புதிய வாழ்வையும் பெறுகின்றோம். இந்தத் திருமுழுக்கு நம்மை கிறிஸ்துவில் இணைக்கிறது. திருச்சபைக்குள்ளே அவரின் சீடராய் வாழும்படி நம்மை ஒருவரோடொருவர் இணைக்கின்றது.

இத்திருமுழுக்கின்போது நாம் புனித ஆவியால் சுத்திகரிக்கப்படுகின்றோம். *(சிரசிலும் உடலிலும் நல்லெண்ணெய் தேய்க்கப்படலாம்).* இந்த ஆவியானவர் எங்களை பற்றுறுதியில் வளரச்செய்வார். உமக்காகத் தெரிந்து கொண்டவர்களை நீர் உமது ஆட்சிக்குள் கொண்டுவரும்போது உம்மால் மீட்க்கப்பட்ட யாவருடனும் நாம் சேர்ந்துகொள்ளும் அந்த எதிர்பாப்பினை அவர் நமக்கருளுகின்றார்.

திருமுழுக்குப் பெறப்போகும் இந்த உமது பிள்ளையை / பிள்ளைகளை தீயோனிடமிருந்தும், தீமையினின்றும் பாதுகாறும் இவரை / இவர்களை இருளிலிருந்து ஒளிக்குள் அழைத்து வாரும். தமது வாழ்நாளெல்லாம்

இவர்கள் உமது அருளாம் கருணையில் அகமகிழ்ந்திருக்கட்டும். *(சந்தனத்தால் நெற்றியில் சிலுவை அடையாளமிடலாம்).* இவர்களின் பெற்றோருக்கும், ஆன்மீகப் பெற்றோருக்கும் உமது ஞானத்தையும் அன்பையும் அருளும். அவர்கள் இவரை/இவர்களை வாழ்நாள் முழுவதும், கிறிஸ்துவின் அருளில் வளர்த்துவரும்படி துணைசெய்ய அவர்களுக்கு அருளீந்தருளும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயராலே ஆமென்.

**நன்றி ஏறெடுப்பு (திருமுழுக்கு தண்ணீரருகில்)**

3. **கண்காணிப்பாளர்:** தந்தை, மைந்தன், தூய ஆவியானவரே சரணம், சரணம், சரணம்.

**அனைவரும்: தந்தையே சரணம் மைந்தரே சரணம் தூய ஆவியானவரே சரணம்**

**கண்காணிப்பாளர்:** உங்கள் இதயங்கள் எழட்டும்.

**அனைவரும்: எங்கள் இதயங்களை ஆண்டவரிடம் எழுப்புகின்றோம்.**

**கண்காணிப்பாளர்:** நாம் ஆண்டவராகிய கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

**அனைவரும்: அவருக்கு நாம் நன்றியும் புகழ்ச்சியும் செலுத்துவது சாலவும் சரியே.**

*(பின்வரும் மன்றாட்டை கண்காணிப்பாளர் தொடர்ச்சியாகச் சொல்லலாம் அல்லது / அடையாளமிடப்பட்ட இடங்களில்*

*நிறுத்தி அவர் "கிறிஸ்துவின் ஒளி" என்று கூற மக்கள் 'அல்லேலூயா' என்று பதிலிறுப்பர்.)*

4. அருளாளராகிய கடவுளே எமக்கு வாழ்வு அருளும், எம்மைப் புனிதப்படுத்தும், வாழ்விற்கு வல்லமை அருளும், உமது கொடைகளாம் தண்ணீருக்காகவும், ஆவிக்காவும் உமக்கு நன்றி கூறுகின்றோம்.
கிறிஸ்துவின் ஒளி

**அனைவரும்:** **அல்லேலூயா**

ஆதிலியிருந்தே உமது அருள் தண்ணீராலும், ஆவியாலும் எமக்கு அருளப்பட்டிருக்கின்றது. ∴ நீரையையும் வாழ்வையும் படைத்தபோது உமது ஆவியானவர் தண்ணீரின் மீது அசைவாடினார். பெருவெள்ளமான தண்ணீரை திருமுழுக்கிற்கு முன்னடையாளமாகக் தந்து பாவத்தை முடிவிற்குக் கொண்டுவந்து புதுவாழ்வு அருளினீர். *(நாம் உலகிற்கு உப்பாய் இருக்கின்றோம் என்பதற்கடையாளமாய் உப்பு நீரில் கரைக்கப்படலாம்).* சிவந்த சமுத்திரத்தின் வழியால் உமது ஒளியாலும் ஆவியாலும் உமது மக்களை விடுதலைக்கு வழிநடத்தினீர்.
கிறிஸ்துவின் ஒளி

**அனைவரும்:** **அல்லேலூயா**

காலம் கனிந்தபோது நீர் உமது திருக்குமாரனை அனுப்பீனிர். அவர் யோர்தான் நதியிலே திருமுழுக்கினைப் பெற்றார். தூய ஆவியானவரால் அமிஷேகிக்கப்பட்டார். *(தூய ஆவியானவர் முத்திரையிடுதலின் அடையாளமாக எண்ணெய் ஆசீர்வதிக்கப்படலாம்).* ஆண்டவர் இயேசு கிறிஸ்து துன்பம் மரணம் என்ற தண்ணீருக்குள் மூழ்கடிக்கப்பட்டு உயிருடன்

எழுப்பப்பட்டார். அதன் பின்பு கிறிஸ்துவிலே அனைவரும் வெளிச்சம் பெறும்படி நீர் உமது ஆவியை அனுப்பி அவர்களின் இதயங்களை கொழுந்துவிட்டெரியச் செய்தீர்..

கிறிஸ்துவின் ஒளி

**அனைவரும்:** **அல்லேலூயா**

*(கண்காணிப்பாளர் தண்ணீரின் மீதும், திருமுழுக்குப் பெறுவோர் மீதும் தமது கரங்களை நீட்டி சிலுவை அடையாளமிடுவார்).*

இந்தத்தண்ணீரில் திருமுழுக்குப் பெறும் இவர்கள் மீது உமது தூய ஆவியை ஊற்றும். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மரித்து, கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டு நன்றியோடு உமது திருச்சகைக்குள் புதுவாழ்வு அடைவார்களாக. இன்று நிகழும் இந்தத் திருமுழுக்கு எங்கள் அனைவருக்கும் உமது ஆட்சியின் அடையாளமாகவும், வரவிருக்கும் வாழ்விற்கு அடையாளமாகவும் அமையட்டும். **ஆமென்.**

கிறிஸ்துவின் ஒளி

**அனைவரும்:** **அல்லேலூயா**

5. **(தாமே பதில் சொல்லக் கூடியவர்கள்)**

பெயர் ....... இப்போது நீர் திருமுழுக்கினைப் பெறப்போகின்றீர். நீர் தண்ணீராலும் புனித ஆவியாலும் மறுபடி பிறக்கப்போகின்றீர். நீர் கிறிஸ்துவின் திருச்சபைக்குள் முழு அங்கத்தினராய் சேர்த்துக் கொள்ளப்படபோகின்றீர். தினம் தினம் கிறிஸ்துவைப் பற்றிய பற்றுறுதியில் வளர்வீராக: பாவம், தீமை என்கிற நஞ்சிலிருந்து உம்மைப் பாதுகாத்துக் கொள்வீராக.

**பெற்றோர், ஆன்மீகப் பெற்றோர், திருமுழுக்குப் பெறுவோர்:**
**கடவுள் துணையோடு நான் திருமுழுக்குப் பெற விரும்புகின்றேன்.**

**கண்காணிப்பாளர்:** இந்தப் பொறுப்பினை ஏற்பதற்கு அடையாளமாக உங்களையும், இங்கிருப்போர் அனைவரையும் உங்கள் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும்படி வேண்டுகின்றோம். உங்கள் கடந்தகால தவறுகளுக்காக மனம்வருந்துங்கள். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் உங்கள் பற்றுறுதியை அறிக்கை செய்யுங்கள். உலகளாவிய திருச்சபையின் பற்றுறுதியை அறிக்கை செய்யுங்கள். இந்தப் பிள்ளைகள் / நபர்கள் இந்த திருச்சபைக்குள் வளரவிருக்கும் அந்தப் பற்றுறுதியை அறிக்கை செய்யுங்கள். கடவுள் அருளும் இந்தக் கொடையும் அழைப்பும் கடவுளால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை (உரோ 11 : 29)- புனித திருமுழுக்கு ஒருபோதும் உங்கள் வாழ்வில் மீண்டும் நிகழ்த்தப் படக்கூடாது.

**துறப்பதற்கான உறுதிமொழி**

6. **கண்காணிப்பாளர்:**
நீர் கிறிஸ்து முகமாய்த் திரும்புகின்றீரா?

**அனைவரும்:** **நான் கிறிஸ்து முகமாய்த் திரும்புகின்றேன்.**

**கண்காணிப்பாளர்:**
சாத்தானையும் எல்லா தீமைகளையும் நீர் துறந்து விடுவீரா?

**அனைவரும்:** **நான் துறந்து விடுகின்றேன்.**

**கண்காணிப்பாளர்:**
கடவுளை மறுக்கும் அனைத்திலிருந்தும், உமது பாவங்களிலிருந்தும் மனம் திரும்புகின்றீரா?

**அனைவரும்:** நான் அப்படியே செய்கின்றேன்.

(மனந்திரும்புதலுக்கான அமைதி)

புனிதராகிய கடவுளே, புனிதமும் மகத்துவமுமானவரே, புனிதமும் நித்தியமுமானவரே, எம்மீது இரக்கமாயிரும்.

புனிதராகிய கடவுளே, புனிதமும் மகத்துவமுமானரே, புனிதமும் நித்தியமுமானவரே, எம்மீது இரக்கமாயிரும்.

புனிதராகிய கடவுளே, புனிதமும் மகத்துவமுமானரே, புனிதமும் நித்தியமுமானவரே, எம்மீது இரக்கமாயிரும்.

அல்லது

*(மாநன்றி வழிபாட்டு முறைமையில் உள்ள வேறு பாவ அறிக்கை மன்றாடல்கள் பாவிக்கப்படலாம். அதனைத் தொடர்ந்து கண்காணிப்பாளர் மன்னிப்பு வாக்கினை பின்வரும் முறையில் அல்லது வேறு முறையில் வழங்கலாம்.*

கடவுள் உமது / உங்கள் பாவங்களை எல்லாம் மன்னித்து உங்களை எல்லா நேர்மையற்ற தன்மையிலிருந்தும் சுத்திகரிக்க உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கின்றார். தூய ஆவியானவரின் வழிநடத்துதலாலே கடவுள் உங்களை இருளிலிருந்து கிறிஸ்துவின் ஒளிக்குள் கொண்டுவருவாராக. ஆமென்.

7. **பற்றுறுதி அறிக்கை**

**கண்காணிப்பாளர்:** நம் யாவருக்கும் பொதுவான கிறிஸ்தவப் பற்றுறுதியை நாம் அறிக்கை செய்வோம்.

அ. **அனைவரும்:**

**விண்ணையும் மண்ணையும் படைத்த படைப்பாளராம் அனைத்தும் வல்ல தந்தையாகிய கடவுளை நான் நம்புகின்றேன்.**

**கடவுளின் ஒரே மைந்தனாம் நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவையும் நம்புகிறேன்.**

**அவர் புனித ஆவியால் உற்பவிக்கப்பட்டு கன்னி மரியாளிடம் மகவாய் பிறந்தாரென்றும் பொந்தியு பிலாத்துவின் ஆட்சியின் கீழ் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார் என்றும் அவர் பாதாளத்திற்கு இறங்கினார் என்றும் மூன்றாம் தினத்திலே உயிரோடு எழுந்தார் என்றும் விண்ணுக்கேறி தந்தையின் வலப்பக்கத்திலே அமர்ந்திருக்கின்றார் என்றும்**

**உயிரோடிருப்பவர்களையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவாரென்றும் நான் நம்புகின்றேன்.**

**புனித ஆவியானவரை நான் நம்புகின்றேன். பொதுவான புனித திருச்சபையையும், புனிதர்களின் நட்புறவையும், பாவங்களுக்கான மன்னிப்பையும், உடலின் உயிர்பபையும், முடிவில்லா வாழ்வையும் நம்புகின்றேன். ஆமென்.**

அல்லது

ஆ. **கண்கானிப்பாளர்:** உலகைப் படைத்த தந்தையாம் கடவுளில் நீர் நம்பிக்கை கொள்கின்றீரா?

**அனைவரும்:** **நான் கடவுளில் நம்பிக்கை கொள்கின்றேன்.**

**கண்கானிப்பாளர்:**

மனிதகுலத்தை மீட்ட கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவில் நீர் நம்பிக்கை கொள்கின்றீரா?

**அனைவரும்: நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவில் நான் நம்பிக்கை கொள்கின்றேன்.**

**கண்காணிப்பாளர்:**
கடவுளின் மக்களுக்கு வாழ்வு அருளும் புனித ஆவியானவரில் நம்பிக்கை கொள்கின்றீரா?

**அனைவரும்: புனித ஆவியானவரில் நான் நம்பிக்கை கொள்கின்றேன்.**

**கண்காணிப்பாளர்:**
இதுதான் திருச்சபையின் நம்பிக்கை.

**அனைவரும்: இதுதான் எங்கள் பற்றுறுதி. ஒரே கடவுளாம்: தந்தை, மைந்தன், புனித ஆவியானவரை நாம் நம்புகின்றோம்.**

**கண்காணிப்பாளர்:**
கடவுளின் புனிதத் திருவுளத்திற்கும் அவரின் கட்டளைகளுக்கும் அடிபணிந்து உமது வாழ்நாளெல்லாம் அதன்படி நடப்பீரா?

**அனைவரும்: கடவுளின் துணையோடு அப்படியே செய்வேன்.**

**அர்ப்பணத்திற்கான அழைப்பு**

8. **கண்காணிப்பாளர்:**
கடவுளின் மக்களாகிய உங்கள்மீது இந்தத் திருவருட் சாதனம் பெரும்பொறுப்பினை வைக்கின்றது. கிறிஸ்துவின் திருச்சபையின் அங்கத்தினராய் அழைப்பைப் பெற்றிருக்கும்

நீங்கள் உண்மையுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டும். இந்த குழந்தை / நபர் (கடவுளின் இந்தப் பிள்ளைகள்) மேலும் இங்கிருக்கும் அனைவரும் உங்கள் மூலம் கிறிஸ்துவின் அன்பில் வளர்ச்சி பெறவேண்டும். இது உங்கள் புனிதமான பொறுப்பு.

பெயர் ...................... தந்தை, மைந்தன், புனித ஆவியானவரின் திருப்பெயராலே திருமுழுக்கைப் பெறுகின்றார்.

**அனைவரும்: ஆமென்.**

*அதன்பின்னர் கண்காணிப்பாளர் ஒவ்வொருவரின் நெற்றியிலும் புனித எண்ணெயால் சிலுவை அடையாளத்தை வரைந்து, அவர்கள் சிரம் மீது கைகளை வைத்து பின்வருமாறு மொழிவார்.*

**கண்கானிப்பாளர்**: பெயர்................................ புனித ஆவியின் முத்திரையைப் பெற்றுக் கொள்வீராக. கடவுளின் கிறிஸ்துவுக்கு அது உம்மை உண்மையுள்ள சாட்சியாக்கட்டும். **ஆமென்**

10. *மற்றுமோர் திருச்சபையிலிருந்து வருபவரை ஏற்றுக்கொள்ளும் போது அல்லது நிபந்தனைக்குட்பட்ட திருமுழுக்கு வழங்கும்போது, அல்லது வயதுக்கு வந்தவர்கள் தமது திருமுழுக்கினை அடையாள ரீதியாய் மீண்டும் உறுதிசெய்து கொள்ள விரும்பும் போது இது ஆசீர்வதிப்பொன்றுடன் இடம்பெறலாம். திருமுழுக்கு வாக்குறுதியைப் புதுப்பித்தலுக்கு அடையாளமாக திருமுழுக்குத் தொட்டியிலிருந்து எடுக்கப்பட்ட நீர் / அல்லது தீபமேற்றப்பட்ட மெழுகுவர்த்திகள் ஒருவர் கையிலிருந்து*

*மற்றவர் கைக்கு மாற்றப்பட்டு திருமுழுக்கிற்கான நன்றி எறெடுப்பு செய்யப்படலாம்.*

**வரவெ¦ò**

11. *புதிதாக திருமுழுக்குப் பெற்றோர் புதிய வெண்ணிற ஆடையை அணிந்திருக்க (கலா 3 : 27 தீத்து 3 : 5), அவர்களின் சார்பாக பெற்றோர், ஆன்மீகப் பெற்றோர் தீபமேற்றிய விளக்கு அல்லது மெழுகுவர்த்தி ஏந்திநிற்க் சபையின் மூத்த நபர் ஒருவர் அல்லது சபைப் பாதுகாவலர் பின்வருமாறு கூறுவார் :*

பெயர்..............................நீங்கள் புதிய படைப்பாயிருக்கின்றீர்கள். விடுதலையடைந்து புதிய மானிடத்திற்குள் அழைக்கப்பட்டு கிறிஸ்து என்னும் ஆடையை அணிந்திருக்கின்றீர்கள். கிறிஸ்துவின் திரு உடலாம் அவரது திருச்சபைக்குள் ஒளியின் ஆவியால் புதுப்பிக்கப்பட்டு இருளிலிருந்து அவரின் உன்னதமான ஒளிக்குள் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். *அல்லேலூயா!*

**அனைவரும்: *அன்பர்களே!* உங்களை கிறிஸ்துவின் திருச்சபையின் அன்புறவிற்குள்ளே அன்புக்கரம் நீட்டி வரவேற்கின்றோம். *அல்லேலூயா! அல்லேலூயா!***

அனைவரும் கரவொலி எழுப்புவர்.

**ஆலயத்தில் வைத்துவிட்டு செல்லவும்**